00007 *(முழுப் பதிப்புரிமையுடையது)*

# இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம்

## இலங்கை நிர்வாக சேவை அலுவலர்களுக்கான முதலாம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை 2013(1)

## பொருளியல் (05)

**3 மணித்தியாலங்கள்**

**ஐந்து (05) வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்க. எல்லா வினாக்களுக்கும் சம அளவில் புள்ளிகள் வழங்கப்படும்.**

---

01 I. பொருத்தமான வரைபுகளையும் உதாரணங்களையும் பயன்படுத்தி அதிகரித்துச் செல்லும் அமையச் செலவுக்கும் (Increasing opportunity cost) குறைந்து செல்லும் அமையச் செலவுக்கும் (Decreasing opportunity cost) இடையிலான வேறுபாட்டை விளக்குக.

II. அதிகரித்துச் செல்லும் அளவுத் திட்ட விளைவு (Increasing return to scale), குறைந்து செல்லும் அளவுத்திட்ட விளைவு (Decreasing return to scale) என்பவற்றுக்கு இடையிலான வேறுபாட்டை விளக்குக.

02 I. சந்தையில் நுகர்வோர் மிகை (Consumer Surplus), உற்பத்தியாளர் மிகை (Producer Surplus) என்பவற்றால் கருதப்படுபவை யாவை?

II. ஏதேனும் ஒரு சந்தையில் நுகர்வோர் மிகையைத் தீர்மானிக்கும் காரணிகளை விளக்குக.

III. சந்தையில் சமூக நல இழப்பு (Deadweight loss) என்பது எதனைக் குறிக்கின்றது?

IV. சமூக நல இழப்புக்கும் (Deadweight loss) விலைசார் கேள்வி நெகிழ்ச்சியின் வகைகளுக்கும் (Types of price elasticity of demand) இடையிலான தொடர்பை பொருத்தமான வரைபுகளைப் பயன்படுத்தி விளக்குக.

03. I. நிறுவனம் ஒன்றின் உற்பத்திச் செயற்பாட்டின் தொழில்நுட்ப வினைத்திறன் (Technical efficiency) என்பதன் மூலம் கருதப்படுவது யாது?

II. நிறுவனம் ஒன்றின் உற்பத்திச் செயற்பாட்டின் தொழில்நுட்ப வினைத்திறன் (Technical efficiency) பொருளாதார வினைத்திறனிலிருந்து (Economic efficiency) எவ்வகையில் வேறுபடுகின்றது?

III. பின்வரும் விடயங்களின் கீழ் நிறை போட்டிச் சந்தையையும் தனியுரிமைச் சந்தையையும் ஒப்பிட்டு விளக்குக.

(i) இலாபத்தை உச்சப்படுத்தும் விலைகளைத் தீர்மானித்தல்.

(ii) நீண்ட கால இலாபம்

(iii) பொருளாதார வினைத்திறன்

ஒவ்வொரு விடையையும் பொருத்தமான வரைபுகளுடன் விளக்குக.

04. I. ஒரு நாட்டில் வேலையின்மையை (Unemployment) ஏற்படுத்தும் முக்கிய காரணிகள் எவை ?

II. கட்டமைப்பு வேலையின்மை, (Structured unemployment) இயல்பு வேலையின்மை (Natural unemployment) என்பவற்றின் மூலம் கருதப்படுவது யாவை ?

III. இலங்கையின் வேலையின்மையின் தன்மையையும் அதன் பிரதான போக்குகளையும் விளக்குக.

05 I. ஒரு பொருளின் நிரம்பலைத் தீர்மானிக்கும் காரணிகள் எவை?

II. ஒரு விலை விதி (Law of one price) என்பதன் கருத்து யாது?

III. ஒருபொருளின் கேள்வி நெகிழ்ச்சியை தீர்மானிப்பதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளை விளக்குக.

IV. பொருத்தமான உதாரணங்களையும் வரைபுகளையும் பயன்படுத்தி ஒரு சந்தையின் குறைந்தபட்ச விலைக்கும் அதிகபட்ச விலைக்கும் இடையிலான வேறுபாட்டை ஒப்பிட்டு ரீதியில் விளக்குக.

06. I. காரணிச் விலை (Factor cost) மற்றும் சந்தை விலை என்பவற்றிற்கு இணங்க மொ உள்நாட்டு உற்பத்தி, மொத்த தேசிய உற்பத்தி என்பன எவற்றைக் குறிக்கின்றன?

II. மேலே குறிப்பிட்ட பெறுமானங்கள் எவ்வாறு கணிக்கப்படுகின்றன?

III. சந்தை விலைக்கு இணங்க மொத்தத் தேசிய உற்பத்தியிலிருந்து செலவிட முடியுமான வருமானம் (Disposable Income) வேறுபடும் பிரதான அம்சங்கள் எவை ?

IV. பொருளாதாரம் ஒன்றின் உட்பாய்சல் (Injection) மற்றும் வெளிப்பாய்ச்சல் (Leakage) பற்றி விளக்குக. உமது கருத்தை விளக்குவதற்கு தேசிய வருமானப் பாய்ச்சல் வட்டத்தைப் (Circular Flow of National Income) பயன்படுத்துக.

V. பின்வரும் எண்ணக்கருக்களைப் பயன்படுத்தி இலங்கையின் பொருளாதாரம் தொடர்பான அடிப்படைத் தகவல்களை வழங்குக.

i. பொருளாதாரக் கட்டமைப்பு
ii. தனிநபர் வருமானம்
iii. பணவீக்க வீதம்
iv. பொருளாதார வளர்ச்சி வீதம்
v. வேலையின்மை வீதம்

07. பொருத்தமான உதாரணங்களுடன் சுருக்கக் குறிப்பு எழுதுக.

I. அரசாங்கத்தின் வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை (Budget Deficit) மற்றும் அரசிறை கொள்கை (Fiscal policy)

II. சென்மதி நிலுவையும் நாணயப் பெறுமதி இறக்கமும்

III. துயர்ச் சுட்டெண் (Misery index) மகிழ்வுச் சுட்டெண் (Happiness index)

IV. பல்பரிமாண வறுமைச் சுட்டெண் (Multidimensional poverty index)

***************